தேதி: 21.02.2019 - செய்தித்தாள்:தினதந்தி

## திருவாரூரில், மாவட்ட அளவிலான

# புத்தாக்க அறிவியல் கண்காட்சி

திருவாரூர்,பிப்.21-

திருவாரூர் அருகே உள்ள புலிவலம் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட அளவிலான புத்தாக்க அறிவியல் கண்காட்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு மன்னார்குடி மாவட்ட கல்வி அலுவலர் விஜயா தலைமை தாங்கினார். மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி மாரிமுத்து கண்காட்சியை தொடங்கி வைத்தார். கண்காட்சியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நீர் மேலாண்மை, பசுமையை காப்போம் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் படைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இந்த படைப்புகளை மாணவர்கள் பார்வையிட்டனர். அத்துடன் படைப்புகளின் செயல்பாடுகள் குறித்தும் மாணவர்களுக்கு விளக்கப்பட்டன. திருவாரூர் மோசஸ் நடுநிலைப் பள்ளி மாணவர் சக்தி ஸ்ரீதர், நீலன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவி இலக்கியா, பேரளம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர் பெலிக்ஸ் ரியாஸ், திருத்துறைப்பூண்டி சாய்ராம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர் முகமது ஹபீஸ், மன்னார்குடி தூய வளனார் மெட்ரிக் பள்ளி மாணவர் சூரிய துரைராஜ் ஆகியோர் மாநில அளவிலான கண்காட்சிக்கு தேர்வு செய்யப்பட்டனர். இதில் திருவாரூர் மாவட்ட கல்வி அலுவலர் ராமன், திருச்சி அண்ணா அறிவியல் மைய தொழில்நுட்ப உதவியாளர் சரவணன், மாவட்ட அறிவியல் ஒருங்கிணைப்பாளர் பாலு, டெல்லி தேசிய புத்தாக்க நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியாளர் கிரிஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.